மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
ஆணையர் அலுவலகம்
நந்தனம், சென்னை–600 035.

மே.கு.எண்.22755/எம்5/2020

நாள்.20.09.2022.

அரசாணை (3டி) எண்.8, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை, நாள். 12.09.2022 அசலாக அனுப்பலாகிறது.

இணைப்பு– அரசாணை (அசல்)

ஒம்/–த.இரகு
ஆணையருக்காக
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பெறுநர்
செல்வி.ஞா.ஹரிபிரியா,
இளநிலை உதவியாளர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், குளச்சல்–வழியாக.

நகல்.
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) கன்னியாகுமரி.
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், குளச்சல்.
எஸ் பிரிவு, கண்காணிப்பாளர், தலைமையலுவலகம்.
எஸ்2 உதவியாளர், தலைமையலுவலகம்.
எம்5 இருப்பு கோப்பு.
IFHRMS

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்
20/09/22

20/9/22

மே.கு.எண்: 2911/அ/2021

மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகம்
குளச்சல்
நாள்: /10/2022

// அனுப்பலாகிறது //

பெறுநர்:
செல்வி.ஞா.ஹரிபிரியா,
இளநிலை உதவியாளர்,
மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம்,
குளச்சல்.

20/10/2022

மீன்துறை உதவி இயக்குநர்
குளச்சல்
7/10/22

028211

## சுருக்கம்

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி. ஞா. ஹரிபிரியா, இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை

அரசாணை (3டி) எண்.8

நாள் 12.09.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது ஆவணி–27

படிக்கப்பட்டது :-

1) அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 23.01.2020.
2) ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித ந.க.எண்.22755/எம்.5/2020, நாள் 30.06.2022.

-----

ஆணை:

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நாகர்கோவில் மீன்வளத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மீன்வள மேற்பார்வையாளர் நிலை – 1 ஆக பணிபுரிந்த ஞா. சரத்குமார், (திருமணமாகாதவர்) 31.10.2019 அன்று பணியிடை காலமாகிவிட்டார் என்றும், அவரது வாரிசுதாரரும் சகோதரியுமான செல்வி ஞா. ஹரிபிரியா 23.11.2019 நாளிட்ட விண்ணப்பத்தில் அவரது சகோதரர் இறந்த பின்னர், குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக தெரிவித்து அவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறும், அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் மீன்வளத்துறை துணை இயக்குநர், கன்னியாகுமரி (மண்டலம்) அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஆணையர் தனது கடிதத்தில் செல்வி. ஞா. ஹரிபிரியா, பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றமைக்கான மதிப்பெண் பட்டியல் மெய்த்தன்மை, பள்ளித் தேர்வுகள் குழுமம் மற்றும் அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களால் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது என்றும் இவரது பிறந்த நாள் 17.02.2000 என்றும் அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 19 வருடம் 8 மாதங்கள் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை எனவும் அசையும் அசையா சொத்துக்கள் ஏதும் இல்லை என விளாத்திகுளம் வட்டாட்சியர் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும் செல்வி. ஞா. ஹரிபிரியா–வுக்கு கருணை

028211

அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக குளச்சல் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 05.06.2021 நாளிட்ட ஆணையரின் செயல்முறை எண்.22755/எம்4/2020-இன்படி பணியமர்த்தப்பட்டு, தனியர் 07.06.2021 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்றும் தெரிவித்து, கருணை அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட செல்வி ஞா. ஹரிபிரியா என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த 07.06.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி இரண்டில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க முடிவு செய்து, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் குளச்சல், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 07.06.2021 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. ஞா. ஹரிபிரியா என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.06.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் அ.சா.கு.எண்.15373/Q1/2022-1, நாள் 26.08.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு.எண்.3060472/ஜி2/2022, நாள் 02.09.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-35.
செல்வி ஞா. ஹரிபிரியா, இளநிலை உதவியாளர்,
(ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக).

<u>நகல்</u>
மனிதவள மேலாண்மை துறை, சென்னை - 9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thruvi 13/9/2022
பிரிவு அலுவலர்
13/09/2022